## திராவிட இயக்க இதழ்கள் - 'குயில்'




பாவேந்தர் பாரதிதாசன் 1946-ஆம் ஆண்டு முதல் 1961-ஆம் ஆண்டு வரை 'குயில்' என்ற பெயரில், திராவிட இயக்கக் கொள்கைகளைப் பறைசாற்றும் கவிதைகளுக்கான இதழ் ஒன்றை நடத்தினார். பிறகு, 1967-ஆம் ஆண்டு முதல் அவரது மகன் மன்னர் மன்னன் 'பாரதிதாசன் குயில்' என்ற பெயரில், திராவிடச் சிந்தனைகளைக் கொண்ட படைப்புகளுடன் வெளிவந்து, சிறிது காலத்துக்குப் பிறகு நின்றுபோனது.

இந்நிலையில், 2008-ஆம் ஆண்டு முதல் தர்மபுரி மாவட்டத்திலிருந்து 'குயில்' என்ற இதழ் வெளிவந்து கொண்டிருக்கிறது. பாவேந்தர் நடத்திய 'குயில்' இதழை முறையாகப் பெற்று, அவருக்குப் பின்னர் கவிஞர் டாக்டர் கே.எம்.ஏ.வகாப் என்பவர் திண்டிவனத்திலிருந்து நடத்தி வந்தார். இவருக்கு 1983-இல் 'பாவேந்தர் பாரதிதாசன் விருது' வழங்கப்பட்டுள்ளது. அவருக்குப் பிறகு அந்த இதழை, கவிஞர் கண்ணிமை நடத்தி வருகிறார்.

பெரியார், பாவேந்தர், கலைஞர் ஆகியோரின் சிந்தனைகள், கவிதைகள் ஆகியவற்றுடன், பாவேந்தர் பரம்பரையில் வரும் புதிய கவிஞர்களுக்கு இந்த இதழ் இடமளிக்கிறது. தவிர, தமிழ் மொழி குறித்தும், தமிழ்க் கவிதைகள் குறித்தும் கருத்துச் செறிவுமிக்க கட்டுரைகளும் வெளிவருகின்றன. பொருளாதார இடர்ப்பாடுகள் கருதி, இது காலாண்டிதழாகவோ அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறையோ வெளிவருகிறது.

## :ப்ளாஷ்பேக்



### கும்பகோணம் நகரில் கலைஞர்!



சி.கலியபெருமாள்

1988-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள, கும்பகோணத்திற்கு வருகை தந்தார். அப்போது, அவரை வரவேற்க வழிநெடுக தொண்டர்கள் திரண்டிருந்தனர். கும்பகோணம் நகராட்சி சார்பாக, அவரை மேடையில் சிறப்பு செய்து வரவேற்றது, என் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வு. அப்போது நகர மன்றத் தலைவர் குமாரசாமி அவர்களும் துணைத்தலைவர் இரா.துரை அவர்களும் உடனிருந்தனர்.

**- சி.கலியபெருமாள்,**
**முன்னாள் நகர மன்ற உறுப்பினர்,**
**கும்பகோணம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### ஒரு துளி மையினால் ஏற்பட்ட புரட்சி!

1971-ஆம் ஆண்டு, குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்கல்) சட்டம் கொண்டு வந்தார் கலைஞர். பரம்பரை பரம்பரையாகப் பண்ணையார்களின் வயலில் குடிசை போட்டு வாழ்ந்து வந்த வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு, அந்த இடத்தின் அனுபோகப் பாத்தியதையை அந்தச் சட்டம் உறுதி செய்தது. 'இரத்தப் புரட்சியால் சாதிக்க முடியாததை, ஒரு துளி மையினால் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் சாதித்துவிட்டார்!' என்று அன்றைய சட்டமன்ற உறுப்பினர், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மணலி கந்தசாமி பாராட்டினார்.

# மாநாடு

**ர.பிரகாசு** **41**

திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...



30.9.73 அன்று மதுரை தமுக்கம் கலைஅரங்கில் கூடிய கூட்டம். இதுபோல் 3 மடங்கு மக்கள் வெளியே இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## மகத்தான வரவேற்பு தந்த மதுரை மாநாடு!

மொழிவழி மாநிலங்கள் பிரிந்துவிட்ட பின்பு, பெரியாரின் 'திராவிட நாடு' முழக்கம் தமிழ்'நாடானது'. ஆனால், ஆரிய ஆதிக்கத்தில் இருந்து விடுபடுவதற்கான வழியாகவே அதைக் கருதினார். அதற்காகவே, 'சுதந்திரத் தமிழ்நாடு அமைப்போம்' என்று முழங்கினார். 1973-ஆம் ஆண்டு பெரியாரின் 95-வது பிறந்தநாள் செய்தியாகவே இதுதான் இருந்தது.

அந்த வாரத்திலேயே மதுரையில் திராவிடர் கழகம் சார்பில், கருஞ்சட்டைப் படை மாநாடு கூட்டப்பட்டது. 30.09.1973 அன்று தமுக்கம் மைதானத்தில் தந்தை பெரியார் தலைமையில், நடைபெற்ற இம்மாநாட்டின் தொடக்கமாக, பெங்களூரு விசாலாட்சி அம்மையார் கொடியேற்றினார். அதைத் தொடர்ந்து, திராவிடர் கழகத்தின் அன்றைய பொதுச் செயலாளரும் இன்றைய தலைவருமான ஆசிரியர் கி.வீரமணி மாநாட்டைத் திறந்து வைத்து, எழுச்சி உரையாற்றினார். திருவாரூர் தங்கராசு, திருச்சி செல்வேந்திரன், வே.ஆனைமுத்து உள்ளிட்டோரும் உரையாற்றினர். காலைமுதல் இரவு வரை பகுத்தறிவுக் கண்காட்சியும் நடைபெற்றது.

**'தமிழ் வளர்த்த மதுரையில் அய்யாவுக்கு சிலை எடுப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி!'**

மாலை யானைக்கல்லில் உள்ள அண்ணாவின் ஆளுயுர சிலைக்கு ஆசிரியர் கி.வீரமணி மாலை அணிவிக்க, அங்கிருந்து மாபெரும் பேரணி தொடங்கியது. ஆயிரக்கணக் கானோர் அணிவகுத்து வந்த அப்பேரணியில், தந்தை பெரியாரும், ஆசிரியர் கி.வீரமணியும் டிராக்டரில் அமர்த்தி வைக்கப்பட்டு அழைத்து வரப்பட்டனர். மூடநம்பிக்கைகளை முறியடிக்கும் விதமாக நூற்றுக்கணக் கானோர் தீச்சட்டி, அலகுக் காவடிகள் எடுத்தவாறு பேரணியில் வந்தனர்.



தந்தை பெரியார் அவர்கள் ஊர்வலத்தில் ரதத்தில் வரும் காட்சி.

மதுரை மண்ணில் 1946-ஆம் ஆண்டு கருஞ்சட்டைப் படை, மாநாட்டுப் பந்தலுக்கு தீ வைக்கப்பட்டது. ஆனால், இப்போதோ அதே மதுரை மாநகரில் பெரியாரை வரவேற்க மக்கள் கூட்டம் அலைமோதியது.

வீட்டு வாசல், மொட்டை மாடி எனக் கிடைத்த இடங்களில் எல்லாம் பெரியாரைப் பார்த்திட மக்கள் முண்டியடித்தனர். ஊர்வலப் பாதையில் ஆண் குழந்தை ஒன்றுக்கு 'அண்ணா' என்று பெயர் சூட்டினார் பெரியார்.

மாலையில், கல்வி அமைச்சர் நாவலர் தலைமையில், தந்தை பெரியாரின் முழு உருவச் சிலையை முதலமைச்சர் கலைஞர் திறந்துவைப்பதாக இருந்தது. ஆனால் உடல்நலக்குறைவு காரணமாக கலைஞர் கலந்துகொள்ள இயலாத நிலையில், நாவலரே சிலையைத் திறந்துவைத்தார். சிலை திறக்கப்படும்பொழுது 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கம் விண்ணை முட்டியது. 'தமிழ் வளர்த்த மதுரையில் அய்யாவுக்கு சிலை எடுப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி' என வர இயலாமையைத் தெரிவித்து வாழ்த்துக் கடிதம் அனுப்பியிருந்தார் முதலமைச்சர் கலைஞர்.

சிலையைத் திறந்துவைத்த பின்னர் நாவலர், மூடநம்பிக்கைகளைத் தகர்க்கும் விதமாக அரியதொரு உரையாற்றினார். அமைச்சர் ராமச்சந்திரன், 'தந்தை பெரியார், திராவிட இயக்கத்தின் கார்ல் மார்க்ஸ்' என புகழாரம் சூட்டினார். பின்னர், உரையாற்றிய தந்தை பெரியார், "நமக்கு வேண்டியதெல்லாம் சமுதாய விடுதலை. அதற்குத் தேவையானது சுதந்திரத் தமிழ்நாடு. அப்படிக் கேட்டால் 7 ஆண்டுகள் சிறையாம். சட்டம் கடுமையானது. இருந்தாலும் ஏற்க வேண்டியதுதான். நம்முடைய இழிவு நீங்க வேண்டுமென்றால் இலேசான காரியமா? உயிரை- உடைமையை- சுயநலத்தையெல்லாம் இழக்கத் தயாராக இருக்க வேண்டும்" என்று ஆவேசமாகப் பேசினார்.

'கருப்புச்சட்டைக்காரர்கள் சங்கம்' என்னும் பேரால் மாவட்டம்தோறும் ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டும், எவ்விதத் தியாகத்திற்கும் தயாராக இருந்து, கழகத்தின் கொள்கைகளை கிராமம்தோறும் இந்த ஸ்தாபனம் பரப்புரை செய்ய வேண்டுமென்று தீர்மானம் போடப்பட்டது. பெரியார் மறைந்து அரைநூற்றாண்டாகியும் கருப்புச்சட்டைகளின் பரப்புரை நீடிக்கிறது! நீடிக்கும்!

**...கூட்டம் திரளும்**

# பாசறை படிப்பறை

**கௌதம் ராஜ்** **41**

"புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்" என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...

## சமத்துவத்துக்கான பாதையில்...

சமத்துவத்தை நோக்கிய நெடும் பயணத்தில் கடந்த நூற்றாண்டைவிட, இன்றையச் சூழலில் பல முன்னேற்றங்களை அடைந்துள்ளோம். குறிப்பாக, 19-ஆம் நூற்றாண்டைவிட, 20-ஆம் நூற்றாண்டில், சமத்துவத்துக்கான போராட்டம் தீவிரமாக இருந்தது. அதில், குறிப்பிடத்தக்கப் பலன்களை இன்று பெற்றிருக்கிறோம். இன்னும் சில பத்தாண்டுகளுக்குப் பின்னர், சூழல் இன்னும் மேம்பட்டிருக்கும் என நம்பலாம். அதை, எவ்வளவு விரைவாகச் சென்றடைகிறோம் என்பதில்தான் விஷயம் உள்ளது, என்கிறார் தாமஸ் பிக்கெட்டி.

**பிரச்சினையைச் சுட்டிக்காட்டுவதாடு நிறுத்திக்கொள்ளாமல், எதிர்காலத்துக்குத் தேவைப்படும் செயல்திட்டங்களையும் தீர்வுகளையும் பகிர்ந்துகொள்கிறார்!**

பிக்கெட்டி, உலகளவில் நிலவும் அசமத்துவத்தைப் பற்றித் தொடர்ச்சியாக ஆய்வு செய்து வருகிறார். 'கேப்பிட்டல் அண்ட் ஐடியாலஜி', 'கேப்பிட்டல் இன் தி டுவெண்ட்டி பர்ஸ்ட் செஞ்சுரி' (Capital and Ideology, Capital in the Twenty-First Century) ஆகிய இரு பெரும் நூல்கள் எழுதியுள்ளார். இவைத் தவிர்த்து, பல சிறு நூல்களும் ஏராளமான ஆய்வுக் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. சமீபத்தில், இவர் எழுதி, தமிழில் மொழியாக்கம் கண்டிருக்கும் நூல்தான்' 'சமத்துவம் நோக்கிய இயக்கம்: சுருக்கமான வரலாறு' (A Brief History of Equality). எதிர் வெளியீடு பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது, அக்களூர் ரவி இந்நூலை மிக அருமையாக மொழியாக்கம் செய்துள்ளார்.




இதுவரை சமத்துவத்தை நோக்கிய பாதையில், உலக மக்கள் அடைந்திருக்கும் முன்னேற்றங்களை நினைவுபடுத்தும் அதே வேளையில், நாம் விரும்பும் உண்மையான சமத்துவத்தை எப்படி அடைவது, என்பது பற்றியும் இந்நூல் பேசுகிறது. பல நூற்றாண்டுக்கால வரலாற்றை 280 பக்கங்களுக்குள் சுருங்கச் சொல்வதில் பிக்கெட்டி வெற்றி பெற்றிருக்கிறார்.

இனவெறி, நிறவெறி, சாதிவெறி போன்ற மரபான ஆதிக்க கட்டமைப்புகளுக்கு எதிராகவும், அதைச் சரிசெய்யும் வகையிலும், அளிக்கப்படும் இடஒதுக்கீடு முக்கியமானது, எனக் கூறி இந்தியாவில் பின்பற்றப்படும் இட ஒதுக்கீட்டை எடுத்துக்காட்டாகச் சொல்கிறார். அத்தகைய இடஒதுக்கீடு முறை சமுதாய ஏற்றத்தாழ்வுகளைப் பெரிய அளவில் குறைத்துள்ளதாகவும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அதிகாரமளித்துள்ளதாகவும் குறிப்பிடுகிறார்.

இந்தியா போன்ற ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த வளரும் நாடுகளில், கடைப்பிடிக்கப்படும் நுழைவுத் தேர்வு போன்றவை ஏற்கெனவே நிலவும் அசமத்துவத்தை மேலும் அதிகமாக்கவே செய்யும். நுழைவுத் தேர்வுகள் ஏற்படுத்தும் மோசமான விளைவுகள், சமத்துவத்தை நோக்கிய பயணத்தில் தடைக்கற்களாக இருக்கும் எனவும் சுட்டி காட்டுகிறார் பிக்கெட்டி.

அதிகாரம் மற்றும் சொத்து ஆகியவை ஓரிடத்தில் குவியாமல் இருக்க, இவர் முன் வைக்கும் தீர்வு Continual Circulation of Power and Property. அதாவது சொத்து, அதிகாரம் இரண்டும் தொடர் சுழற்சியில் இருக்க வேண்டும், என்கிறார். ஒரு குறிப்பிட்ட இடத்தில் இவை தேங்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

கம்யூனிச அரசுகள் கடைப்பிடித்த சர்வாதிகார மாடலுக்கு மாற்றாக சட்டபூர்வமான ஜனநாயகக் கூட்டாட்சி ஒன்றின்மூலம் இதைச் செயல்படுத்த வேண்டும், என்கிறார் பிக்கெட்டி. இவர் குறிப்பிடும் வரிவிதிப்பு முறை அதற்கான ஆரம்பப் புள்ளியாக அமைகிறது.


பிரச்சினையைச் சுட்டிக்காட்டுவதாடு நிறுத்திக்கொள்ளாமல், எதிர்காலத்துக்குத் தேவைப்படும் செயல்திட்டங்களையும் தீர்வுகளையும் பகிர்ந்துகொள்கிறார் எனும் வகையில், பிக்கெட்டியின் இந்தப் புதிய வரவு கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது.

**...வாசிப்போம்.**

# திராவிடத்தால் வாழ்கிறோம்

**685**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131